

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்துக்கு உட்பட்ட விருகம்பாக்கம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பகுதி, ஒன்றியம், வட்டம், கிளை மற்றும் பாகங்களில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகர்ராஜா, காரம்பாக்கம் கணபதி, பகுதிக் கழகச் செயலாளரும், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவருமான நொளம்பூர் ராஜன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மோ.ராஜா, கண்ணன், ஒன்றியச் செயலாளர் வீரமணி, சமூக வலைதளப் பயிற்சியாளர் இளமாறன், மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் சங்கர் கணேஷ், ராமாபுரம் ரவி, விநாயகமூர்த்தி, கிருஷ்ணகுமார், எழில் பாண்டியன், தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வினோத், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் நவராஜ், நரேன் கணபதி, சி.எச்.தினேஷ், மணி, ஜெயப்பிரகாஷ், உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# 2026-இல் வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!

## சென்னை தெற்கு மாவட்டம்– விருகம்பாக்கம், மதுரவாயல் தொகுதி இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுக ஆலோசனைக்கூட்டத்தில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை,ஆக.26-**

**சென்னை தெற்கு மாவட்டக் கழகத்துக்கு உட்பட்ட விருகம்பாக்கம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பகுதி, ஒன்றியம், வட்டம், கிளை மற்றும் பாகங்களில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், “2026-ல் வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்ற உறுதியோடு உழைத்திட வேண்டும்” எனக் குறிப்பிட்டு, வாழ்த்திப் பேசினார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

சென்னை தெற்கு மாவட்டம், ஒரு வாரத்துக்கு முன்புதான் சைதாபேட்டை, வேளச்சேரி தொகுதிகளுக்கான அறிமுக கூட்டம் நடந்தது. மிக குறுகியக் காலத்தில் மீண்டும் அதே சென்னை தெற்கு மாவட்டத்துக்கான விருகம்பாக்கம், மதுரவாயல் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வட்ட அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றதற்கு மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

“எல்லோரும் 4 மணிக்கெல்லாம் வந்துவிட்டீர்கள்” என்று பிரபாகர்ராஜா சொன்னார். அதனால் அதிக நேரம் பேசி, உங்களைக் காக்க வைக்கப் போவது கிடையாது. நீங்கள் அனைவரும் என்னுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள மிகவும் ஆர்வமாக இருக்கிறீர்கள். அதனால் எனது உரையை முடிந்தளவு விரைவில் முடித்துவிடுகின்றேன். நீங்கள் எந்த அளவுகு ஆர்வமாக இருக்கிறீர்களோ, அதே அளவு நானும் உங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கு ஆர்வமாக இருக்கிறேன்.

இந்த இரண்டு தொகுதிகளைச் சேர்ந்த வட்ட மற்றும் பாக அமைப்பாளர்களுக்கான புதிய நிர்வாகிகள் பட்டியல் இன்று காலையில்தான் `முரசொலி'யில் வெளியானது.

### புதிய நிர்வாகிகள்

இன்று காலையில் முரசொலியில் வெளியாகி, இன்று மாலையிலேயே அறிமுகக் கூட்டத்தை நடத்துகிறோம் என்றார், அது தி.மு.க இளைஞர் அணிக்கு மட்டும்தான் சாத்தியம். அந்த அளவுக்கு இளைஞர் அணி என்றால் வேகமாக இருக்க வேண்டும். அதற்கு இதுவே ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. முதலில் பொறுப்புக்கு வந்துள்ள புதிய நிர்வாகிகள் உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு சென்று நிர்வாகிகளை சந்தித்தாலும், இந்த இளைஞர் அணி நிர்வாகிகளை சந்திக்கும்போது, எனது சொந்த குடும்பத்தில் இருக்கின்ற அண்ணனையும், தம்பியையும் பார்க்கின்ற உணர்வு ஏற்படும். அந்த மகிழ்ச்சியான உண்ர்வோடுதான் உங்கள் முன்பு நின்றுகொண்டு இருக்கிறேன்.

பிரபாகர்ராஜா அவர்கள் பேசும்போது, `அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார். அவர் என்னதான் அமைச்சராக, சட்டமன்ற உறுப்பினராக, மேயராக இருந்தாலும் அவருக்கு மனதுக்குப் பிடித்த பெருமையான பொறுப்பு என்றால், அவர் தலைவருக்கு கீழ் மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளராக சிறப்பாக பணியாற்றியவர்தான் அண்ணன் மா.சுப்பிரமணியன்' என்று குறிப்பிட்டார். அதேபோலத்தான் நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

### மிகப்பெரிய பெருமை

சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத்துறை அமைச்சர், இன்று தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் என இப்படி எத்தனையோ பொறுப்புகள் வந்தாலும், எனது மனதுக்கு மிகுந்த நெருக்கமான பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களையும்விட இந்த சென்னை தெற்கு மாவட்டத்துக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. குறிப்பாக, இந்தித் திணிப்புக்கு எதிரான மொழிப்போரின் போது, தன்னுடைய இன்னுயிரைத் தந்த விருகம்பாக்கம் அரங்கநாதன் உங்களுடையத் தொகுதியைச் சேர்ந்தவர் என்பதில் உங்களுக்கு மிகப்பெரிய பெருமை.

வடமொழி ஆதிக்கத்தை, தன்னுடைய எழுத்தாலும், பேச்சாலும் எதிர்த்த தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்களை தந்த மண், நம் மதுரவாயல் மண். அப்படிப்பட்ட பெருமைக்குரிய இரண்டு தொகுதிகளிலிருந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள். எப்படி உங்கள் தொகுதிக்கு வரலாறு இருக்கிறதோ, அதேமாதிரி நம் இளைஞர் அணிக்கு என்று ஒரு மிகப்பெரிய வரலாறு இருக்கிறது.



### ஆலமரமாக இளைஞர் அணி

கோபாலபுரம் தி.மு.க. இளைஞர் மன்றம் என்று என்று ஆரம்பித்து, நம் துலைவர் அவர்கள் போட்ட விதை, 1980-இல் மதுரை ஜான்சிராணி பூங்காவில் அந்த விதை சிறிய செடியானது. இன்றைக்கு 45 வருடம் கழித்து, உங்கள் முன் இளைஞர் அணி என்ற ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது, நம் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி. இன்றைக்கு இந்தியாவில் எத்தனையோ இயக்கங்கள் இளைஞர் அணி என்று தொடங்குகிறார்கள். ஆனால், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து இயக்கங்களுக்கும் ஒரு வழிகாட்டி, முன்னோடி என்றால், அது நம் தி.மு.க இளைஞர் அணிதான். இந்தியாவிலேயே முதன்முறையாக ஓர் இயக்கத்துக்கு இளைஞர் அணி என்று ஆரம்பித்தது என்றால், அது நம் இளைஞர் அணிதான். அதை ஆரம்பித்தவர் நம் கழகத் தலைவர் அவர்கள். அது மட்டுமல்ல, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால், கழகத்தில் எத்தனையோ அணிகள் இருக்கின்றன. ஆனால், பலமுறை கலைஞர் அவர்களால், `எத்தனையோ அணிகள் இருந்தாலும், கழகத்தின் முதன்மை அணி என்றால், அது இளைஞர் அணி' என்று பாராட்டப்பட்ட அணிதான் நம் இளைஞர் அணி. அப்படிப்பட்ட பெருமைக்குரிய அணியில் நாமெல்லாம் நிர்வாகிகளாக இருப்பது நமக்கு எல்லாம் மிகபெரிய பெருமை.

இங்கே இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல, மாவட்ட – பகுதி – வட்டக்கழக நிர்வாகிகளும் வந்திருக்கிறீர்கள். இளைஞர் அணி இன்றைக்கு இந்த அளவுக்கு சிறப்பாக வளர்ந்து இருக்கிறதென்றால், அதற்கு மாவட்ட – பகுதி – வட்டக் கழக நிர்வாகிகள் உங்களின் ஒத்துழைப்பும் மிகமிக முக்கியம்.

### சமூகவலைதளம்

கழகத்துக்கு வலுசேர்க்க வேண்டுமென்று, இளைஞர் அணியில் கூடுதல் நிர்வாகிகளைக் கொண்டு வருவதற்கான பணிகளை, கடந்த 2020-ஆம் ஆண்டு தொடங்கினோம். அதேமாதிரி, சமூகவலைதளத்திலும் துடிப்போடு இருக்க வேண்டும் என்று, கழகத்திற்காக உழைக்கின்ற இளைஞர்கள் வேண்டும் என்று கழக மாவட்டத்துக்கு ஒரு மாவட்டத் துணை அமைப்பாளரைத் தொடர்ந்து நியமித்து கொண்டு இருக்கிறோம். அதற்கான நேர்காணல் நடந்துகொண்டு இருக்கிறது.

இந்தப்பணிகளின் தொடர்ச்சியாகத்தான் உங்களை நியமனம் செய்து இருக்கிறோம். இன்றைக்கு இந்தியாவில் பல கட்சிகள், பூத் கமிட்டி அமைக்கவே சிரமப்படுகிற நேரத்தில், பூத்துக்கு ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை, நாம் நியமித்து இருக்கிறோம் என்றால், அது தி.மு.க இளைஞர் அணியின் மிகப்பெரிய சாதனை. புதிதாகப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற நீங்கள் அத்தனைபேரும் சாதாரணமாக இந்த இடத்திற்கு வரவில்லை.

முதலில் மாவட்டக் கழகத்தில் இருந்து, பகுதி, வட்டச் செயலாளர்களின் பரிந்துரைகளை வாங்கினோம். அன்பகத்திலிருந்து இதற்காகவே ஒரு தனிக் குழு அமைத்து, பரிந்துரைச் செய்யப்பட்ட நபர்கள் ஒவ்வொருவரையும் தொடர்பு கொண்டு பேசினோம். அதில், உங்களின் பின்புலம், கொள்கைபற்று, கழக உணர்வு, குடும்ப வரலாறு, கழக உணர்வு, சமூக வலைதள அறிவு எனை அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு உங்களை இந்தப் பொறுப்புக்கு நியமித்து இருக்கிறோம். உங்களுக்குக் கொடுத்திருப்பது, பதவி கிடையாது, பொறுப்பு என்பதை நீங்கள் உணந்து பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

இளைஞர் அணியில் நீங்கள் உழைத்தால், நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும் என்பதற்கு இந்த மேடையே ஒரு சிறந்த உதாரணம்.

### சிறந்த பணிகள்

இங்கே மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சராக இருக்கின்ற அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள், ஏற்கனவே சொன்னதைப்போல பகுதி இளைஞர் அணி அமைப்பாளராக – மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக – தலைவர் அவர்கள் குழுவில் மாநில இளைஞர் அணித் துணை அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றிவர். அவரின் சிறந்த பணிகள் அவரை இன்றைக்கு மாவட்டச் செயலாளராகவும், அமைச்சராகவும் உயர்த்தி இருக்கின்றன. நம் தலைவர் அவர்கள் வகித்த சென்னை மேயர் பொறுப்பிலும் மிகச் சிறப்பாக செயல்பட்டவர்தான் மா.சுப்பிரமணியன் அவர்கள். இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையில் சிறந்த அமைச்சராக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார். இளைஞர் அணியில் வந்ததினால்தானோ என்னவோ அது மாரத்தான் போட்டியாக இருந்தாலும் சரி, கழகப் பணியாக இருந்தாலும் சரி, ஓடிக்கொண்டே இருப்பவர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள்.

இன்றைக்குக்கூட இந்த கூட்டத்திற்கு பார்த்தீர்கள் என்றால் தென்காசி, நெல்லை, தூத்துகுடி விமான நிலையத்துக்குச் சென்று ஓடி வந்திருக்கிறார் நம் அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள். அவர் மட்டுமல்ல, இங்கு இளைஞர் அணியில் மண்டலப் பொறுப்பாளராக இருக்கின்ற சகோதரர் ஜோயல் அவர்கள். தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, தலைவருடன் இணைந்து பணியாற்றியவர். அவர்தான் இன்றைக்கு என்னையும் வழிநடத்துகிறார்

உங்களுடைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், என் அருமை சகோதரர் பிரபாகர்ராஜா அவர்கள். தலைவர் அவர்களால் மாவட்டத் இளைஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டு, பின்பு மாவட்ட அமைப்பாளராக பொறுப்பு உயர்த்தப்பட்டு, அவர் ஆற்றிவரும் பணிகளை தலைவர் அவர்கள் கூர்ந்து கவனித்ததால், 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுகிற வாய்ப்பைப் பெற்று, மிகப்பெரிய வெற்றியைப் பெற்று, இன்றைக்கு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார் சகோதரர் பிரபாகர்ராஜா அவர்கள்.

### கடைசிப் பக்கம்

`முரசொலி' யில் கடைசிப் பக்கத்தை, தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு என்று தனியாக ஒதுக்கிக் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த அணி, இளைஞர் அணி. பாசறைப் பக்கம் என்ற பக்கம் இருக்கிறது. அது படிப்பதற்கு எளிதாக இருக்கும். சின்னச் சின்ன துணுக்குகள், கழகத்தின் வரலாறு, கார்டூன்ஸ் என்று எளிதாக இருக்கும். தயவுசெய்து முரசொலியை வாங்கி, பாசறைப் பக்கத்தைத் தவறாமல் படிக்க முயற்சி செய்யுங்கள்.

உங்களிடம் என் முக்கியமான வேண்டுகோள். புதிய பொறுப்புகளுக்கு வந்திருக்கின்ற தம்பிகளுக்கு, இங்கு வந்திருக்கின்ற பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் முக்கியமான வேண்டுகோள். புதிய பொறுப்புகளுக்கு வந்திருக்கின்ற தம்பிகள் அனைவருக்கும் பெரிதாக அரசியல் அனுபவம் இருக்காது. அரசியலுக்கு முதல் தலைமுறையாகக் கூட வந்திருப்பார்கள். எனவே, அவர்கள் தெரியாமல் ஏதாவது சின்னச் சின்ன தவறு செய்தால், நெறிமுறைகள் தெரியாமல் நடந்துகொண்டால் அவர்களை தயவு செய்து புறக்கணிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடன் கூட இருந்து வழிநடத்துங்கள். அவர்களின் கைகளைப் பிடித்துத் தூக்கி விடுங்கள்.

இன்றைக்கு சென்னை தெற்கு மாவட்டம் மட்டுமல்ல, அடுத்து தமிழ்நாடு முழுவதும் நகர – பேரூர் வார்டுகள், ஊராட்சிக் கிளைகள் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமிக்க இருக்கிறோம். இப்படி நியமித்தால், இளைஞர் அணியில் நிர்வாகிகள் மட்டுமே 5 லட்சம் பேர் வருவார்கள். இப்படிபட்ட நிர்வாகிகள் எந்த இயக்கத்திலும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. இது இளைஞர் அணியின் மிகப்பெரிய சாதனை. அப்படி ஒரு நிலை உருவானது என்றால், இந்தியாவிலேயே அசைக்க முடியாத ஓர் இயக்கம் என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம்தான் அதற்கு காரணம் நம் இளைஞர் அணிதான் என்பதை நாம் நிரூபிக்கலாம். அந்த 5 லட்சம் பேரும் குறைந்தது 10 வாக்குகளை மட்டும் குறிவைத்து, நமது பணிகள் இருந்தது என்றால், கிட்டத்தட்ட 50 லட்சம் வாக்குகள் நம் உதயசூரியன் சின்னத்துக்கு, நம் கழகத் தலைவருக்குக் கொண்டு வரலாம்.

இன்றைக்கு பல இளைஞர்கள் எந்த இயக்கத்திலும் சென்று சேரலாம், எந்த கட்சியில் சேரலாம் என்று பலபேர் குழப்பத்திலும் இருக்கிறார்கள். அவர்களிடம் எல்லாம் நீங்கள் பேசுங்கள்.

### நான்கு பணிகள்

சில இளைஞர்கள் எதிர்க்கட்சியில்கூட இருப்பார்கள். அவர்களுக்கு நம் இயக்கத்தின் வரலாறு, இந்த நான்கு ஆண்டுகளில் நம் அரசு செய்த சாதனைகள், தலைவரின் வரலாறு, எப்படி ஒவ்வொரு படியாக முன்னுக்கு வந்தார். எப்படி இந்த முதலமைச்சர் பதவியை அடைந்தார் என்பதை எல்லாம், நம் கழகத்தின வரலாறுகளை எல்லாம் தெரிந்துகொண்டு, நீங்கள் அவர்களிடம் பேசுங்கள். அவர்களுக்கு நம் கழகத்தின் தியாகங்கள், கொள்கைகள் தெரியாமல் இருக்கலாம். அவற்றையெல்லாம் நீங்கள் தெரிந்துகொண்டு மற்ற இளைஞர்களிடம் அதைப்பற்றி பேசுங்கள். இன்றைக்கு இளைஞர் அணி சார்பில், களத்தில் மட்டுமல்லாமல், கருத்தியல் ரீதியாவும் பல பணிகளை நாம் செய்கிறோம்.

தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு கலைஞர் நூற்றாண்டில் இளைஞர் அணிக்கு நான்கு பணிகளைக் கொடுத்தார். இளைஞர் அணிக்கு மிகமிக முக்கியமான பணிகளை கொடுத்தார். சட்டமன்றத் தொகுதி தோறும் இளைஞர் அணி சார்பாக நூலகங்களைத் திறக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் கட்டளையிட்டார்கள். இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க 234 தொகுதிகளில், 100 சட்டமன்ற தொகுதிகளில் கலைஞர் நூற்றாண்டு நூலகங்களை இளைஞர் அணி திறந்து இருக்கிறது.

அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் பேசும்போது சொன்னார். தலைவர் அவர்கள் குறைந்தது 100 இளம் பேச்சாளர்களை கண்டுபிடித்துக்கொடுங்கள் என்றுச் சொன்னார். இன்றைக்கு இளைஞர் அணி சார்பாக, கிட்டத்தட்ட 190 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து தலைவரிடம் ஒப்படைத்து இருக்கிறோம். இளம்பேச்சாளர்கள் அத்தனைப்பேரும் தமிழ்நாடு முழுக்கப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு காரணம் நம் இளைஞர் அணி.

அடுத்து மிக மிக முக்கியமான முன்னெடுப்பு. எந்த இயக்கமும் இதை செய்யமாட்டார்கள். கலைஞர் மாணவர் பத்திரிகையாளர் திட்டம். நாளைய பத்திரிக்கையாளர்களை உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தை இப்போது தொடங்கி இருக்கிறோம். திராவிட இயக்க ஆய்வாளர்கள்- எழுத்தாளர்களை ஊக்குவிக்க, கலைஞர் நிதி நல்கைத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறது இளைஞர் அணி.

கழகம் தொடங்கப்பட்டு, 75 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, அதைக் கொண்டாடுகின்ற வகையில் மிகப்பெரிய கருத்தரங்கத்தை, தலைவரிடம் அனுமதி வாங்கி, விரைவில், நடத்த இருக்கிறோம். இந்தப் பணிகளை எல்லாம் நீங்கள் இளைஞர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். இப்படி புதிய இளைஞர்களைச் சேர்ப்பது, தேர்தலுக்குப் பிறகும் நமக்கு மிகப் பெரிய பலமாக இருக்கும்.

மக்களை தினசரி சந்தித்துப் பேசுங்கள். அவர்களுக்கு இருக்கின்ற மிகப்பெரிய குறையே, அவர்களிடம் யாரும் வந்து, `என்ன குறை' என்று கேட்காததுதான். உங்களால் செய்ய முடிந்தால், அதை நீங்கள் செய்து கொடுங்கள். உங்களால் செய்ய முடியவில்லை என்றால், உங்கள் மாவட்ட அமைப்பாளர், மாவட்டச் செயலாளரிடம் அவர்களின் கோரிக்கையை கொண்டுச் செல்லுங்கள். நிச்சயம், மக்களோடு நீங்கள் தொடர்பில் இருந்தீர்கள் என்றால், அவர்களின் அன்பையும், ஆதரவையும் நீங்கள் பெற்று விடலாம்.

இன்றைக்கு நம் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் நல்ல திட்டங்களை மக்களுக்கு அறிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். நம் திட்டத்தால் ஒவ்வொரு வீட்டிலும், ஒருவராவது நம் அரசின் திட்டங்களால் நிச்சயம் பயன்பெற்று இருப்பார்கள். எனவே, அவர்களிடம் இதை ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள். நம் திட்டங்களைப் பார்த்து இன்றைக்கு வட இந்தியாவே பாராட்டிக்கொண்டு இருக்கிறது. ஆனால், இதைப் பொறுக்க முடியாமல்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு, நம் அரசிற்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறது. இதை எல்லாம் எதிர்த்து, குரல் கொடுக்கிற ஒரே தலைவர், இந்தியாவிலேயே நம் ஒரே தலைவர் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமில்லை, `ஓரணியில் தமிழ்நாடு' என்ற ஒரு சிறப்பான முன்னெடுப்பை நம்முடைய தலைவர் அவர்கள் அறிவித்தார். இன்றைக்கு `ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பின் மூலமாக 2 கோடி உறுப்பினர்களைக் கழகத்தில் நாம் இணைத்து இருக்கிறோம்.

இந்த `ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கைப் பணியில் இளைஞர் அணியினர் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்று பல மாவட்டச் செயலாளர்கள் என்னிடம் பெருமையாகச் சொல்லி இருக்கிறார்கள். அதில் நீங்கள் இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் பார்த்துத்தான், அ.தி.மு.க-வுக்கு பயம் வந்துவிட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்றைக்கு எங்குச் சென்று பேசினாலும், நம்முடைய தலைவர் பற்றியும், ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தைப் பற்றியும்தான் அவர் பேசுகிறார்.

அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணி திரும்பவும் வந்தால், தமிழ்நாட்டுக்குள் மீண்டும் என்னென்ன வரும் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். தமிழ்நாட்டிற்குள் இந்தித் திணிப்பு வரும், தமிழ்நாட்டிற்கு தொகுதி மறுவரையறை வந்துவிடும். புதியக் கல்விக்கொள்கை வந்துவிடும். ஆகவே, பா.ஜ.க, அ.தி.மு.க-வை வீழ்த்துவதற்கான போரில், நம் இளைஞர் அணி முன்வரிசையில் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில், கழக அணி 200-க்கு அதிகமான தொகுதிகளில் வெற்றிப்பெற வேண்டும் என்று தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார். அதற்கு ஒரு தொடக்கமாக இந்த விருகம்பாக்கம், மதுரவாயல் தொகுதிகள் இருக்க வேண்டும் என்று நீங்கள் அத்தனைப்பேரும் சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

2026- சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்று 7-வது முறையாக கழகம் ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து 2-வது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்றால், அதற்கு நீங்கள் அத்தனைபேரும் களத்தில் இறங்கி, மக்களைச் சந்தித்து தேர்தல் பணியை இன்றிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். புதிய வட்ட மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் உட்பட இங்கே வருகை தந்திருக்கும் அத்தனைப்பேரின் பணிகளும் சிறப்பாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்றுச் சொல்லி இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகர்ராஜா, காரப்பாக்கம் கணபதி, பகுதிக் கழகச் செயலாளரும், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவருமான நொளம்பூர் ராஜன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மோ.ராஜா, கண்ணன், ஒன்றியச் செயலாளர் வீரமணி, சமூக வலைதளப் பயிற்சியாளர் இளமாறன், மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் சங்கர் கணேஷ், ராமாபுரம் ரவி, விநாயகமூர்த்தி, கிருஷ்ணகுமார், எழில் பாண்டியன், தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வினோத், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் நவராஜ், நரேன் கணபதி, சி.எச்.தினேஷ், மணி, ஜெயப்பிரகாஷ், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.